# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- | |
| Miscellaneous | --- | |
| Preliminary Register | : | **CC 760 /2022** |
| Deposition of Witness for | : | PW 3 |
| Name | : | திரு.சசிகுமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 04.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 04 June 2026.

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

முதல்விசாரணை:

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலர் பணிபுரிந்த மாசானம் மற்றும் உதவி ஆய்வாளர் சங்கரநாராயணன் ஆகியோர்கள் கையொப்பம் நன்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டங்களுக்கு சென்று விட்டார்கள். வழக்கின் சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 01.07.2021-ம் தேதி 10.00 மணிக்குஇரண்டாம் நிலை காவலர் மாசானம் நிலையப்பொறுப்பில் இருந்தபோது குவளைக்கண்ணி

பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த கவிதா என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.229/2021 இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, 352, 355, 506(i) மற்றும் 4 of TNPHW Act–ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகும். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் அருள்மொழி அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, அன்றையதினமே 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பெருமாள், ராமராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் கவிதா, திரிஷா, சாந்தம்மாள், பேச்சியம்மாள், ராமராஜ், பெருமாள் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த இரண்டாம் நிலை காவலர் மாசானம் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். அன்றைய தினமே 19.00 மணிக்கு எதிரிகள் கருப்பையா, சண்முகநாதன், பழனிவேல் ஆகியவர்களை கரிவலம்வந்தநல்லூரில் கைது செய்து, நிலையம் கொண்டு வந்து நிலைய ஜாமீனில் விடுவித்துள்ளார். பின்னர் காயம்பட்ட சாட்சிகளுக்க சிகிச்சை அளித்த சங்கரன்கோவில் அரசுமருத்துவமனை மருத்துவர் அன்னராஜ் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் பெற்றுள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச .பிரிவுகள் 294(பி), 323, 352, 355, 506(i) மற்றும் 4 of TNPHW Act–ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரி கைது செய்வதாக சொல்வதுவும், மருத்துவரிடம் காயச்சான்றிதழ் பெற்றதாக சொல்வதுவும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.